பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
29 07 2025 TUESDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் தக்க பதிலடி கொடுக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மக்களவையில் தெரிவித்துள்ளார்.
- விவசாயிகளின் வருவாய் மற்றும் உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- புலிகள் பாதுகாப்பில் இந்தியா குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றுள்ளதாக மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.
- நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் 65 ஆயிரம் கோடிக்கும் அதிகமான டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி கூறியுள்ளார்.
- ஆசிய ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், 4 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<<

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் தக்க பதிலடி கொடுக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் ஆப்பரேஷன் சிந்தூர் குறித்த விவாதத்தில் பேசிய அவர், பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளை நமது பாதுகாப்புப் படையினர் அழித்துவிட்டதாக கூறினார்.

இந்த தீவிரவாதிகளை அனுப்பியவர்களை பிரதமர் ஒழித்துவிட்டதாகவும் உள்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

*ஜம்மு காஷ்மீரில் நேற்று மேற்கொள்ளப்பட்ட ஆப்பரேஷன் மகாதேவ் நடவடிக்கையில் கொல்லப்பட்ட 3 தீவிரவாதிகள், பஹல்காம் தாக்குதலில் தொடர்புடையவர்கள் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.*

**>>>>>><<<<<<**

*விவசாயிகளின் வருவாய் மற்றும் உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.*

*மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், 2013 – 2014ஆம் ஆண்டில் 246 மில்லியன் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி, தற்போது 353 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது என்று கூறினார்.*

*பருப்பு வகை உற்பத்தியும் 16 மில்லியன் டன்னிலிருந்து 25 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*உற்பத்தி அதிகரிப்பு, சாகுபடி செலவை குறைத்தல். பயிர்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்டுதல், விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்தல் போன்றவற்றின் மூலம் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக திரு. சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்தார்.*

**>>>>>><<<<<<**

*புலிகள் பாதுகாப்பில் இந்தியா குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றுள்ளதாக மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.*

*சர்வதேச புலிகள் தினத்தை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், புலிகளையும், அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாக்க இந்நாளில் உறுதியேற்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.*

உலகில் உள்ள மொத்த புலிகளின் எண்ணிக்கையில் 70 சதவீதம் இந்தியாவில் உள்ளதா***கவும் அவர் தெரிவித்துள்ளார்.***

***நாட்டின் 18 மாநிலங்களில் உள்ள 58 புலிகள் சரணாலயங்களில் மூவாயிரத்து 682 புலிகள் உள்ளதாகவும், இதன்மூலம் புலிகள் பாதுகாப்பில் இந்தியா உலகிற்கு முன்னோடியாக திகழ்வதாகவும் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.***

***இதனிடையே, தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், புலிகளை பாதுகாப்பதன் மூலம் காடுகளின் ஆன்மா பாதுகாக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.***

***தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணைய தரவுகளின் படி, தமிழகத்தில் 306 புலிகள் இருப்பதை சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், இதற்கு காரணமான வனத்துறை பணியாளர்கள் மற்றும் வேட்டை தடுப்பு அணியினருக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.***

**>>>>>><<<<<<<**

**ORS** கரைசல் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நீர்ச்சத்து இழப்பு மற்றும் வயிற்றுப் போக்கை கட்டுப்படுத்த குறைந்த செலவில் கிடைக்கும் **ORS** கரைசல் நல்ல பயனை அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த கரைசல் எளிமையானதாக இருந்தாலும், சக்தி வாய்ந்ததாக இருப்பதோடு, குழந்தைகளின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நீர்ச்சத்து இழப்பிலிருந்து பாதுகாக்க உதவுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிரை பாதுகாக்கும் இந்த சிகிச்சை முறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கமாக உள்ளதாக திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<<<**

நாட்டில் கடந்த 2020 முதல் 2025ஆம் ஆண்டு வரையிலான ***காலகட்டத்***தில் 65 ஆயிரம் கோடிக்கும் அதிகமான டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள் நடைபெற்றிருப்பதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி கூறியுள்ளார்.

***மக்களவையில் இதனை தெரிவித்த அவர், 12 ஆயிரம் லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை டிஜிட்டல் முறையில் பரிவர்த்தனை செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.***

***இதுதொடர்பாக மத்திய அரசு ரிசர்வ் வங்கி மற்றும் தேசிய பணப்பட்டுவாடா கழகம், நிதி தொழில்நுட்ப நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் மாநில அரசுகளுடன் இணைந்து, நாட்டில் உள்ள 2-ஆம் நிலை மற்றும் 3ஆம் நிலை நகரங்களிலும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை ஊக்குவிக்க முயற்சி மேற்கொண்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.***

**>>>>>><<<<<<**

***தமிழகத்தின், நாமக்கல் மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம், சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.***

***நடப்பு கரீப் பருவத்தில் பாசிப்பயறு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற, இம்மாதம் 31ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.***

***(வாய்ஸ் பைட் – கண்ணன் 46 செகண்ட்ஸ்)***

**>>>>>><<<<<<**

ஜார்க்கண்ட் மாநிலம், **Jamunia Chowk** அருகே **Deoghar - Hansdiha** நெடுஞ்சாலையில் இன்று காலை நேரிட்ட விபத்தில், **Kanwar** யாத்திரை மேற்கொண்டிருந்த 4 பேர் உயிரிழந்தனர்., 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

**>>>>>><<<<<<**

***அமர்நாத் புனித யாத்திரை மேற்கொள்ளும் 27வது குழுவினர் இன்று அதிகாலை ஜம்முவிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.***

*பகவதிநகர் முகாமிலிருந்து 186 பெண்கள் உட்பட ஆயிரத்து 490 யாத்ரிகர்கள் இந்த யாத்திரையை மேற்கொண்டுள்ளனர்.*

*இவர்கள் பால்தள் மற்றும் பஹல்காம் வழியாக யாத்திரையை மேற்கொள்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>>><<<<<<*

*ஹிமாச்சலப்பிரதேசம். மத்தியப்பிரதேசம், பீகார் மாநிலங்களில் இன்று கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*ஹரியானா. குஜராத். கர்நாடகா, ஒடிசா, ஜார்க்கண்ட், கேரளா மாநிலங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.*

*இதனிடையே, மத்தியப்பிரதேசத்தில் நேற்று கனமழை பெய்துள்ளதாகவும், 14 மாவட்டங்களில் இன்றும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*கர்நாடகாவில் அரசு அதிகாரிகள் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த புகாரின் பேரில், அம்மாநில லோக் ஆயுக்தா அமைப்பினர் நான்கு மாவட்டங்களில் சோதனை மேற்கொண்டுள்ளனர்.*

*ஹாசன் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தில் பணியாற்றும் செயற்பொறியாளர், சிக்கபல்லபுரா கிராமப்புற குடிநீர் திட்ட இளநிலை பொறியாளர், சித்ரதுர்கா மாவட்டத்தில் பணியாற்றும் வட்டார சுகாதார அதிகாரி உள்ளிட்டோருக்கு சொந்தமான இடங்களில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*இதேபோன்று, பெங்களூரு பெருநகர வளர்ச்சி ஆணையத்தில் பணியாற்றும் வருவாய் அதிகாரி மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநருக்கு சொந்தமான இடங்களிலும் சோதனை நடைபெற்று வருகிறது.*

*>>>>>><<<<<<*

உலக கோப்பை செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற திவ்யா தேஷ்முக் மற்றும் 2ஆம் இடம் பிடித்த கொனேரு ஹம்பிக்கு நாடாளுமன்றத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மக்களவை இன்று காலை கூடியதும், இவர்கள் இருவருக்கும் அவையின் சார்பில் அவைத்தலைவர் திரு. ஓம் பிர்லா வாழ்த்து தெரிவித்தார்.

மாநிலங்களவையில் திவ்யா தேஷ்முக்கிற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

ஆசிய ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், 4 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

தென்கொரியாவின் *Jecheon*-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் சீனியர் பிரிவில் *Aryanpal*-ம், ஜூனியர் பிரிவில் *Krish* மற்றும் *Anish*-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் ஜூனியர் பிரிவில் *Poorvi* மற்றும் பவ்யாவும், ஆடவர் சீனியர் பிரிவில் *Anand* மற்றும் *Thanush*-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

மகளிர் சீனியர் பிரிவில் கல்பனா வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

தாய்லாந்தில் நடைபெற்ற உலக *Sepak Takraw* சாம்பியன் போட்டியில் இந்தியா 3 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<<

*Macau* ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று சீனாவில் தொடங்கியது. ஆடவர் ஒற்றையர் பிரிவு தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Meiraba Luwang Maisnam** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<